# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, DINDIGUL.
## S.C. 126/2024
## Prosecution Witness : 8

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | **:** | **திரு. சுபாஷ் சந்திரபோஸ்** | **Caste** | **:** | |
| **Father's Name** | **:** | **திரு. சுப்பிரமணி** | **Calling** | **:** | |
| **Village** | **:** | பெரியபள்ளபட்டி | **Religion** | **:** | இந்து |
| **Taluk** | **:** | திண்டுக்கல் | **Age** | **:** | **30** |
| | | | **Dated** | **:** | **19.08.2025** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**1 முதல் 3 வரையிலான எதிரிகள் ஆஜர்.**

அ.சா. 8 (பட்டியல் சாட்சி 8), **திரு. சுபாஷ் சந்திரபோஸ்** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்பட்டார்.

<u>**முதல் விசாரணை :-**</u>

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து லோடு மேனாக வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ஆணங்களில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையது அல்ல. 2001ம் ஆண்டு ஒரு நாள் மாரியம்மன் கோவில் திருவிழாவின் போது திண்டுக்கல் தாலுகா காவல் நிலையத்திற்கு சென்று, திருவிழாவிற்கு அனுமதி கேட்டபோது போலீசார் என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். எனக்கு இந்த வழக்கை பற்றி எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் சாட்சி பிறழ் சாட்சியாக மாறிவிட்டதால் அரசு தரப்பில் அவரை குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதி கேட்டதன் பேரில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:-**

போலீசார் விசாரணையில் கடந்த 18.08.2021ம் தேதி மதியம் 18.00 மணிக்கு, திண்டுக்கல் - வத்தலக்குண்டு ரோடு குட்டியபட்டி பஸ் ஸ்டாப் அருகே நின்று கொண்டு இருந்தபோது, திண்டுக்கல் தாலுகா காவல் நிலைய ஆய்வாளர் எதிரி நாய்வெட்டு என்ற மாரிமுத்து என்பவரை விசாரித்தபோது, அவர் எவ்வித வற்புறுத்துதலும் இல்லாமல் தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை என் முன்னிலையிலும், சாட்சி விக்னேஷ் என்பவர் முன்னிலையிலும் பதிவுசெய்தார் என்றும், அதன் அடிப்படையில் அன்றைய தினமே 19.15 மணிக்கு எங்கள் முன்னிலையில் அவர் வழக்கு சம்பவத்திற்கு பயன்படுத்திய இரத்த கறை பட்ட அருவாளை எடுத்து ஆஜர் செய்ய அதை ஆய்வாளர் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினார் என்றும், அதற்காக சாட்சி கையெழுத்து போட்டுவிட்டு, உண்மையை மாற்றி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open court on 19.08.2025 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

(Sd/..) V. Deepa,
Chief Judicial Magistrate,
Dindigul.